இடைநிலை ஆசிரியர்கள் அளவுக்கு சம்பளத்தைப் பெறுவார்கள். விடுப்பைப் பொறுத்தவரையில் சிறு விடுப்பு அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. யாருக்கு விடுப்பு கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம். மருத்துவ விடுப்பு போன்றவற்றைப்பற்றியெல்லாம் நாங்கள் பரிசீலனை செய்கிறோம்.

குறிஞ்சிபாடி மற்றும் நெய்வேலியில் தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள்.

*வினா எண் 260—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியில் நெய்வேலியில் தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு 600 வீடுகள் கட்டி கொடுத்தும் இன்னும் அவர்கள் குடியேறவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது அந்த வேலைகள் முடிவுற்று, 530 வீடுகளில் குடிபுகுந்து விட்டனர். மீதி 70 வீடுகளில், சம்பந்தப்பட்டவர்கள் வேலைக்குச் சென்று வீடு திரும்ப வசதியில்லாததால், குடியேற வில்லை. இவற்றை இதர தகுதி வாய்ந்த அகதிகளுக்கு ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொள்கிறார்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 530 வீடுகளில் குடியேறி இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே கட்டப்பட்ட வீடுகள் நல்ல நிலையில் இல்லாது பழுது பட்டு இருப்பதால் குடியேறவில்லை என்று சொல்கிறார்கள், ஆகவே அவைகளை ரிப்பேர் செய்து அவர்கள் குடியேறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போது எல்லா வேலைகளும் முடிக்கப்பெற்று 530 வீடுகளில் குடிபுகுந்து விட்டனர் என்றும் பாக்கி 70 வீடுகளில் குடியேற சம்பந்தப்பட்டவர்கள் 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பண்ணையில் வேலை செய்கிற காரணத்தினால் அங்கே இருந்து வருவதற்கு வசதியில்லை என்ற காரணத்தினால் போகாமல் இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றத்தகுதி வாய்ந்த இலங்கை அகதிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராசு : தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட பகுதியில் குடிநீர் வசதியில்லை, மின்சார வசதியில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த வசதிகள் அவர்கள் குடியேறும்போது செய்யத் தவறிவிட்டது என்ற நிலையில் வருகிற காலத்திலாவது

1982 பிப்ரவரி 18]

இப்படிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவர்கள் குடியேறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிநீர் வசதி கொடுக்காத காரணத்தால் அவர்களெல்லாம் குடிபுகாமல் மறுத்துவிட்டார்கள். குடிநீர் வசதிகள் அமைக்கப்பட்டு இப்பொழுது அவர்கள் குடியேறி விட்டார்கள். தெருவிளக்கு சம்பந்தப்பட்டதைப் பொறுத்த வரையில், தெரு விளக்குகள் அமைக்க தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்குக் குடிவராத சூழ்நிலை இலங்கைத் தமிழர்களுக்கு உண்டு. அது அங்கு மட்டுமல்ல, குறிப்பாக நீலகிரி மாவட்டத்திலே அவர்கள் வாழ வழியின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு புதிய திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதை விளக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப் பாடி, நெய்வேலி பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீலகிரி மாவட்டத்தைப்பற்றிக் கேட்கிறார்கள். அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் தகவல் கொடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 16–2–1982 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have recevied with satisfaction your Resolution thanking me for Address on the 1st February 1982 to the Members of the legislature"

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS